**ஆகஸ்ட் – 02**

# TNPSC துளிகள்

- அசாம் மாநிலம் தனது முதல் சர்வதேச 'புராபி ஐஸ்கிரீம்/பனிக்கூழ்' (Purabi Ice Cream) தொகுப்பை பூட்டானுக்கு ஏற்றுமதி செய்துள்ளதுடன் இது அம்மாநில பால்வளத் துறையில் ஒரு மைல்கல்லாக அமைந்துள்ளது.
- வரியற்றப் பணியாளர் நலன்களுக்காக இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த கட்டண இடைமுக (UPI) அடிப்படையிலான ஃப்ளெக்ஸி பெனிஃபிட்ஸ் வாலட்டை (Flexi Benefits Wallet) OmniCard நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.
  - இந்த வாலட் இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) உரிமம் பெற்ற 'முன்பணம் செலுத்தும் கருவித்' (PPI) தளத்தில் உருவாக்கப்பட்டுள்ளது மற்றும் UPI ஸ்கேன்-அண்ட்-பே பரிவர்த்தனைகளை ஆதரிக்கிறது.
- நேபாளத்தின் லலித்பூரில் புனரமைக்கப்பட்ட ஸ்ரீ குஸ்தல் மகாவிஹார் மற்றும் பிரதம் ஸ்ரீ மகாவிஹாரின் ஆகம் ஆகியவற்றை இந்தியாவும் நேபாளமும் கூட்டாகத் திறந்து வைத்தன.
  - ஸ்ரீ குஸ்தல் மகாவிஹார் மற்றும் பிரதம்ஸ்ரீ மகாவிஹாரின் ஆகம் ஆகியவை நேபாளத்தின் காத்மாண்டு பள்ளத்தாக்கில் உள்ள பதான் (லலித்பூர்), குய்டா டோலில் அமைந்துள்ள பழமையான பௌத்த பாரம்பரிய அமைப்புகளாகும்.
- தாய்ப்பால் ஊட்டுவதை ஊக்குவிப்பதற்கும், தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கும் உலக தாய்ப்பால் வாரம் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 முதல் 7 வரை அனுசரிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Breastfeeding for a Sustainable Start in Life: Strengthen What Works என்பதாகும்.
- உலகளாவிய இணைய வலையின் (WWW) கண்டுபிடிப்பு மற்றும் உலகளாவிய தகவல்தொடர்புகளில் அதன் தாக்கத்தை கொண்டாடும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 1 அன்று உலகளாவிய இணைய வலை தினம் அனுசரிக்கப் படுகிறது.
  - உலகளாவிய இணைய வலை (WWW) 1989 ஆம் ஆண்டில் சர் டிம் பெர்னர்ஸ்-லீ என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டதுடன் இது 1991 ஆம் ஆண்டில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வந்தது.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் டிஜிட்டல் தளங்களின் விரிவாக்கம்

- இந்தியாவின் உலகளாவிய டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு (DPI) முயற்சிகளை வலுப்படுத்தும் வகையில், இந்தியா ஸ்டேக்கை (India Stack) ஏற்க 24 நாடுகள் இந்தியாவுடன் கூட்டு சேர்ந்துள்ளன.
- இந்தியா ஸ்டேக் என்பது ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம் (UPI), டிஜிலாக்கர், ஆதார், மின்னணு வாடிக்கையாளரை அறிதல் (e-KYC), மின்னணு கையொப்பம் (eSign) மற்றும் கணக்கு ஒருங்கிணைப்புக் கட்டமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
- கென்யா மற்றும் கியூபாவில் டிஜிலாக்கர் பயன்பாடு தொடங்கியுள்ளது, அதே நேரத்தில் UPI வணிகர் கொடுப்பனவுகள் 10 சர்வதேச சந்தைகளில் கிடைக்கின்றன.
- டிஜிட்டல் ஆளுமை தளங்களை விரிவுபடுத்துவதற்காக லாவோஸ், சீஷெல்ஸ்,

அர்மீனியா, பிஜி, கயானா, கொலம்பியா மற்றும் வெனிசுலா போன்ற நாடுகளுடனும் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

❖ இந்த முன்னெடுப்பானது டிஜிட்டல் ஆளுமை, நிதி உள்ளடக்கம், காகிதமில்லா பொதுச் சேவைகள் மற்றும் சர்வதேச டிஜிட்டல் ஒத்துழைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## தொலைக்காட்சி மதிப்பீட்டுக் கொள்கை, 2026

❖ இது தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டது.

❖ இது 2014 ஆம் ஆண்டு வழிகாட்டுதல்களுக்குப் பதிலாக அமல்படுத்தப்பட்டுள்ளது.


❖ இக்கொள்கையின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய சீர்திருத்தங்கள் பின்வருமாறு:
  - நிகரச் சொத்து மதிப்புக்கான தகுதி அளவுகோலை ரூ. 20 கோடியிலிருந்து ரூ. 5 கோடியாகக் குறைத்தல்;
  - இணைக்கப்பட்ட தொலைக்காட்சிகள் மற்றும் ஓடிடி தளங்களில் கிடைக்கும் தொலைக் காட்சி அலைவரிசைகள் உள்ளிட்ட பல தளங்களில் தொழில்நுட்பச் சார்பற்ற பார்வையாளர் அளவீடு;
  - அளவீடு செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையை 50,000-லிருந்து 80,000-ஆக விரிவுபடுத்துவதன் மூலம் மாதிரி அளவை அதிகரித்தல்;
  - ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் ஒருமுறை நிறுவன ஆய்வுகளை நடத்துதல்;
  - பார்வையாளர் தரவுகளைக் கணக்கிடும்போது முகப்புப் பக்கத்தை விலக்குதல்;
  - ஆண்டுதோறும் சுதந்திரமான தணிக்கைகள்; மற்றும்
  - இணங்காதவர்களுக்கான தரப்படுத்தப்பட்ட அபராதக் கட்டமைப்பு.

- தொலைக்காட்சி மதிப்பீட்டுக் கொள்கை, 2026, தொலைக்காட்சி மதிப்பீட்டுச் சேவைகளை வழங்கப் பதிவு செய்யப்படக் கூடிய முகமைகளின் எண்ணிக்கையில் எந்தக் கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை.




## சர்வதேசச் செய்திகள்

### உலகளாவிய எச்.ஐ.வி (HIV) நிதியுதவி





- 2025 ஆம் ஆண்டில் உலகளாவிய மனித நோயெதிர்ப்பு குறைபாடு வைரஸ் (HIV) நிதியுதவி 1.5 பில்லியன் அமெரிக்க டாலர்கள் குறைந்துள்ளதாக எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கூட்டுத் திட்டம் (UNAIDS) தெரிவித்துள்ளது, இது 2030

ஆம் ஆண்டிற்குள் பொது சுகாதார அச்சுறுத்தலாக இருக்கும் எய்ட்ஸ் நோயை முடிவுக்குக் கொண்டுவரும் இலக்கை அச்சுறுத்துகிறது.

- சர்வதேச எச்.ஐ.வி நிதியுதவி 2024 ஆம் ஆண்டில் 8.8 பில்லியன் டாலர்களில் இருந்து 2025 ஆம் ஆண்டில் 7.3 பில்லியன் டாலர்களாகக் குறைந்துள்ளது, இது கடந்த இரண்டு தசாப்தங்களில் இல்லாத மிகக் குறைந்த அளவாகும்.
- குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு எச்.ஐ.வி திட்டங்களுக்கு ஆண்டுதோறும் 21.9 பில்லியன் அமெரிக்க டாலர்கள் தேவைப்படுகிறது, ஆனால் 2025 ஆம் ஆண்டில் 17.6 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மட்டுமே கிடைத்துள்ளன, இதனால் 4.3 பில்லியன் அமெரிக்க டாலர்கள் நிதி இடைவெளி ஏற்பட்டுள்ளது.
- நிதி குறைப்புகள் காரணமாக எச்.ஐ.வி தடுப்பு, சிகிச்சை, மருந்து விநியோகச் சங்கிலிகள் மற்றும் சமூக சுகாதார சேவைகள், குறிப்பாக சப்-சஹாரா ஆப்பிரிக்காவில் பாதிக்கப் பட்டுள்ளன.
- 149 ஐக்கிய நாடுகள் (UN) உறுப்பு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் குறித்த 2026 ஆம் ஆண்டு அரசியல் பிரகடனம், 2030 ஆம் ஆண்டிற்குள் எய்ட்ஸ் நோயை பொது சுகாதார அச்சுறுத்தலாக மாற்றுவதை முடிவுக்கு கொண்டு வர சிகிச்சை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## IEA-வின் மின்சார இடைக்கால அறிக்கை 2026




- IEA-வின் 2026 மின்சார இடைக்கால அறிக்கையின்படி, உலகளாவிய மின்சார நுகர்வு 2025-ஆம் ஆண்டில் 28,600 டெராவாட் மணிநேரத்திலிருந்து 2027-ஆம் ஆண்டுக்குள் 30,700 டெராவாட் மணி நேரமாக உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- தொழில்துறை, மின்சார வாகனங்கள், குளிரூட்டல், வீட்டு உபகரணங்கள் மற்றும் தரவு மையங்கள் ஆகியவற்றால் இந்த வளர்ச்சி உந்தப்படும்.
- 2025-ஆம் ஆண்டில் ஏறக்குறைய சமநிலையை எட்டிய பிறகு, புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தி 2026-ஆம் ஆண்டில் உலகளவில் நிலக்கரியை விஞ்சும் என எதிர் பார்க்கப் படுகிறது.
- உலகளாவிய மின்சார விநியோக வளர்ச்சியில் சூரிய ஒளி மின்சக்தி மிகப்பெரியப் பங்களிப்பாளராகத் தொடர்கிறது.
- சூரிய ஒளிமின்சக்தி, காற்றாலை மின்சாரத்தை விஞ்சி, நீர்மின்சக்திக்கு அடுத்த படியாக உலகின் இரண்டாவது பெரிய புதுப்பிக்கத்தக்க மின்சார ஆதாரமாக மாறும்.
- கடந்த பத்தாண்டுகளில் காணப்பட்ட வளர்ச்சிப் போக்கை மாற்றி, உலகளாவிய எரிவாயு மூலமான மின்சார உற்பத்தி 2026-ஆம் ஆண்டில் பெரிய அளவில்

மாற்றமின்றி இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

- சீனா மற்றும் இந்தியாவில் புதிய அணு உலைகள் செயல்படத் தொடங்குவதாலும், அமெரிக்கா மற்றும் பிரான்சில் வலுவான உற்பத்தி இருப்பதாலும், 2026-ஆம் ஆண்டில் அணுமின் உற்பத்தி அதிகரித்து, 2027-ஆம் ஆண்டில் மேலும் வேகமெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- தொழில்துறை நடவடிக்கைகள், சேவைகள் வளர்ச்சி மற்றும் வெப்ப அலைகளால் ஏற்படும் குளிரூட்டும் தேவை ஆகியவற்றின் ஆதரவுடன், 2026-ஆம் ஆண்டில் இந்தியாவின் மின்சாரத் தேவை 7% மீண்டு வரும் என கணிக்கப் பட்டுள்ளது.
- மாலை நேர உச்சபட்ச மின் தேவை தொடர்ந்து அதிகரித்து, மின் கட்டமைப்புக்கு பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தி வரும் நிலையிலும், இந்தியா ஜூலை மாதத்தில் முதன்முறையாக 100 ஜிகாவாட் மாறும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் விநியோகத்தைக் கடந்தது.
- வேகமாக அதிகரித்து வரும் மாலை நேர உச்சபட்ச மின் தேவையால், நிலக்கரி மற்றும் எரிவாயு மின் நிலையங்கள் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை தொடர்ந்து உள்ளது.
- 2026-ஆம் ஆண்டின் முதல் பாதியில் இந்தியாவின் ஒருங்கிணைந்த சூரிய ஒளிமின்சக்தி மற்றும் காற்றாலை மின் உற்பத்தி 25 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்தது.
- மொத்த மின் விநியோகத்தில் அதன் பங்கு 42.79 சதவீதத்தை எட்டியதுடன் இது இதுவரை பதிவு செய்யப்பட்டதிலேயே மிக உயர்ந்த அளவாகும்.
- உடனடி தரைவழி மாறும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி 103 ஜிகாவாட் என்ற புதிய உச்சத்தைத் தொட்டது.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்கு 35 சதவீதம் முதல் 42 சதவீதம் வரை இருந்துள்ளது.
- நீர்மின்சக்தி மற்றும் அணுசக்தியையும் சேர்த்துக் கொள்ளும்போது, புதைபடிவமற்ற மூலங்கள் மொத்த மின்சார விநியோகத்தில் கிட்டத்தட்ட பாதியைக் கொண்டுள்ளன.
- சர்வதேச எரிசக்தி முகமை (IEA) என்பது 1974-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட, பாரிஸைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு தன்னாட்சி பெற்ற அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.
- இது உலகளாவிய எரிசக்தித் துறை குறித்த கொள்கைப் பரிந்துரைகள், பகுப்பாய்வு மற்றும் தரவுகளை வழங்குகிறது.
- IEA-வின் 32 உறுப்பு நாடுகளும் 13 கூட்டமைப்பு நாடுகளும் உலகளாவிய எரிசக்தித் தேவையின் 75%-ஐப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.
- இது 1973 ஆம் ஆண்டு எண்ணெய் நெருக்கடிக்குப் பிறகு, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (OECD) கட்டமைப்பின் கீழ் அமைக்கப்பட்டது.
- இதன் வெளியீடுகளில் வருடாந்திர உலக எரிசக்தி கண்ணோட்டம் மற்றும் 2050-ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ஜிய அறிக்கை ஆகியவை அடங்கும்.
- IEA-வின் அனைத்து உறுப்பு நாடுகளும் புவி வெப்பமயமாதலை 1.5 °C-ஆகக் கட்டுப்படுத்தும் நோக்கம் கொண்ட பாரிஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன, மேலும் IEA உறுப்பு அரசாங்கங்களில் மூன்றில் இரண்டு பங்கு அரசாங்கங்கள் 2050-ஆம் ஆண்டுக்குள் உமிழ்வு நடுநிலைமையை அடைவதற்கான உறுதிமொழிகளை அளித்துள்ளன.
- ஆனால் அமெரிக்கா இரண்டு முறை இதிலிருந்து விலகியுள்ளது.
- இந்தியா, 2017 ஆம் ஆண்டு மார்ச் 30 அன்று சர்வதேச எரிசக்தி முகமையுடன் (IEA) தனது 'இணைவு' நிலையை அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

- 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், பிரேசில் ஓர் உறுப்பினர் நாடாக ஆவதற்கான செயல்முறையைத் தொடங்கியது.
- IEA-வின் தூய்மையான எரிசக்தி மாற்றங்கள் திட்டம், பிரேசில், சீனா, இந்தியா, இந்தோனேசியா, மெக்சிகோ மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளை முன்னுரிமை நாடுகளாக அடையாளம் கண்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## பொறுப்புமிக்க வரி நிர்வாகத்தின் 5R-கள்





- மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், பொறுப்புமிக்க வரி நிர்வாகத்தின் 5R-களை கோடிட்டுக் காட்டுகிறார்.
- பொறுப்புமிக்க வரி நிர்வாகத்தின் 5R-கள் என்பவை அங்கீகரித்தல், பதிலளித்தல், தீர்வு காணுதல், பிரதிபலித்தல் மற்றும் சீர்திருத்தம் செய்தல் ஆகும்.
- மத்திய நிதியமைச்சர், நியாயமான, திறமையான, வெளிப்படையான மற்றும் வரி செலுத்துவோரை மையமாகக் கொண்ட நிர்வாகத்தை மீண்டும் வலியுறுத்துகிறார்.
- மேலும், வரி செலுத்துவோரின் நம்பிக்கையை வலுப்படுத்தவும், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கவும், அதிக வரி உறுதித்தன்மை மற்றும் குறைக்கப்பட்ட வழக்குகளுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.
- மத்திய நிதியமைச்சர், வருமான வரித் துறையின் ஆறு முதன்மை வெளியீடுகளையும் வெளியிட்டார்.
- அவற்றில் அடங்குபவை:
  - சர்வதேச வரிவிதிப்பில் இந்தியாவின் வளர்ந்து வரும் தலைமைத்துவத்தை எடுத்துக்காட்டும் FT&TR பிரிவின் தொடக்க ஆண்டு அறிக்கையான 'அவலோகன்';
  - தகவல் பரிமாற்றத்திற்கான கையேடு; FATCA மற்றும் CRS மீதான புதுப்பிக்கப்பட்ட வழிகாட்டுதல் குறிப்பு;
  - கிரிப்டோ-சொத்து சேவை வழங்குநர்களுக்கான கிரிப்டோ சொத்து அறிக்கை கடமைகள் குறித்த இந்தியாவின் முதல் விரிவான வழிகாட்டுதல் குறிப்பு;
  - திட்டத்தின் முன்னேற்றத்தைக் காண்பிக்கும் APA திட்டத்தின் ஆண்டு அறிக்கை; மற்றும்

- வரி நிர்வாகத்தை மறுசீரமைத்தல்: காகித அடிப்படையிலான செயல்முறைகளிலிருந்து ஒருங்கிணைந்த, தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் மற்றும் வரி செலுத்துவோரை மையமாகக் கொண்ட டிஜிட்டல் சூழலமைப்பாகத் துறையின் உருமாற்றப் பயணத்தைக் கண்டறிதல்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## விண்வெளிப் பொருட்கள் மறுநுழைவுக்கான புதிய விதிகள்

- ❖ விண்கலங்களின் மறுநுழைவு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக, 2026 ஆம் ஆண்டு ஜூலை 23 அன்று விண்வெளிப் பொருட்களின் திட்டமிடப்பட்ட மறுநுழைவை மேற்கொள்வதற்கான அங்கீகாரத்திற்கான புதிய விதிமுறைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகளை இந்தியா அறிமுகப்படுத்தியது.
- ❖ இந்த வழிகாட்டுதல்களை விண்வெளித் துறையின் கீழ் இயங்கும் இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (IN-SPACe) வெளியிட்டுள்ளது.
- ❖ இந்தியப் பகுதிக்குள் மறுநுழைவு நடத்தும் வெளிநாட்டு இயக்குநர்கள் மற்றும் இந்திய நிறுவனங்கள் திட்டமிடப்பட்ட மறுநுழைவுக்கு IN-SPACe இன் முன் அனுமதி பெறுவது கட்டாயமாகும்.
- ❖ விண்கலங்கள் அல்லது குப்பைகள் மறுநுழைவால் ஏற்படும் சேதங்களுக்கு தனியார் இயக்குநர்கள் முழுப் பொறுப்பையும் ஏற்பார்கள் மற்றும் மூன்றாம் தரப்பு பொறுப்புக் காப்பீட்டைப் பராமரிக்க வேண்டும்.
- ❖ விண்கல மறுநுழைவுப் பணிகள் மனித உயிரிழப்பு அபாயத்தை 10,000 இல் 1 என்ற அளவிற்குக் கீழே பராமரிக்க வேண்டும் மற்றும் விண்வெளி குப்பைகளைத் தணிப்பதற்கான நடவடிக்கைகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என இவ்விதிகள் கூறுகின்றன.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## வரையாடுகளுக்கான புதிய வாழ்விடம்

- ❖ கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் உள்ள வரையாட்டுமுடி, அழிந்துவரும் நிலையில் உள்ள வரையாடுகளின் (நீலகிரி தார்) முக்கிய வாழ்விடமாக உருவெடுத்துள்ளதுடன், அதன் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது.

- வாழ்விடம் மறுசீரமைப்பு முயற்சிகளுக்குப் பிறகு வரையாடுகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் சுமார் 50 ஆக இருந்த நிலையில் தற்போது 150 ஆக உயர்ந்துள்ளது.
- அந்நிய ஆக்கிரமிப்புத் தாவரங்களை அகற்றி, இயற்கை புல்வெளிகளை மீட்டெடுப்பதன் மூலம் 22.5 ஹெக்டேர் பரப்பளவில் கேரள வனத்துறை சூழலியல் மறுசீரமைப்புப் பணிகளை நிறைவு செய்துள்ளது.
- இப்பகுதியின் புல்வெளிகள், சோலை காடுகள், பாறை முகடுகள் மற்றும் குளிர்ந்த பருவநிலை ஆகியன இந்த இனத்திற்கு பொருத்தமான வாழ்விடத்தை வழங்குகின்றன.
- வனத்துறை பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தியுள்ளதுடன், பாதுகாப்பிற்கு ஆதரவளிப்பதற்கும் உள்ளூர் பழங்குடியினச் சமூகங்களுக்கு நிலையான வாழ்வாதாரங்களை வழங்குவதற்கும் ஒரு சூழலியல் சுற்றுலா மலையேற்றத் திட்டத்தையும் முன்மொழிந்துள்ளது.




## ஜப்பானின் செயல்படும் எரிமலை - கிகாய் கால்டெரா




- ஜப்பானின் கிகாய் கால்டெராவின் அடியில் உள்ள மாக்மா நீர்த்தேக்கம் மீண்டும் நிரம்புவதை அறிவியலாளர்கள் கவனித்துள்ளனர் என்ற நிலையில் இது பெரிய எரிமலைகள் பெரும் வெடிப்புகளுக்குப் பிறகு எவ்வாறு மீட்கப்படுகின்றன என்பது பற்றிய நுண்ணறிவுகளை வழங்குகிறது.

- கிகாய் கால்டெரா என்பது ஜப்பானின் கியூஷு தீவின் தெற்கே கிழக்கு சீனக் கடலில் அமைந்துள்ள ஒரு மிகப் பெரிய நீர்மூழ்கி கால்டெரா ஆகும்.
- இந்த கால்டெரா சுமார் 19 கிலோமீட்டர் விட்டம் கொண்டது மற்றும் கடல் மட்டத்திற்கு மேலே உயர்ந்துள்ள மூன்று சிறிய தீவுகளையும் உள்ளடக்கியது.
- சுமார் 7,300 ஆண்டுகளுக்கு முன்பு, ஹோலோசீன் சகாப்தத்தின் மிகப்பெரிய எரிமலை வெடிப்புகளில் ஒன்றை இது உருவாக்கியதுடன் அதில் சுமார் 150 கன கிலோ மீட்டர் சாம்பல் வெளியேற்றப்பட்டது.
- இந்த வெடிப்பு எரிமலை வெடிப்பு குறியீட்டில் (VEI) 7 என்ற அளவைக் கொண்டிருந்தது, மேலும் கால்டெரா எரிமலைத் தன்மையுடன் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது என்பதோடு இது சமீபத்திய ஆய்வுகள் புதிய லாவா குவிமாடம் உருவாவதைக் குறிக்கின்றன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்


## சந்தை விலகல்கள் செயல்திறன் குறியீடு




- காம்பிடேர் அறக்கட்டளை (Competere Foundation) அறிக்கையின்படி, சந்தை விலகல்கள் செயல்திறன் குறியீட்டில் இந்தியா 2010 ஆம் ஆண்டில் 82 வது இடத்திலிருந்து 2023 ஆம் ஆண்டில் 57வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- சரக்கு மற்றும் சேவை வரி (GST), திவால்நிலை மற்றும் நொடிப்புநிலை சட்டம் (IBC), ஒழுங்குமுறைச் சீர்திருத்தங்கள் மற்றும் வர்த்தக வசதி நடவடிக்கைகள் போன்ற சீர்திருத்தங்களே இந்தியாவின் இந்த முன்னேற்றத்திற்குக் காரணம் என அந்த அறிக்கை கூறுகிறது.
- நாடுகளின் உரிமைகளைப் பாதுகாத்தல், உள்நாட்டுப் போட்டி மற்றும் சர்வதேசப் போட்டி ஆகியவற்றின் அடிப்படையில் இந்தக் குறியீடு நாடுகளை மதிப்பிடுகிறது.

- இந்தச் சீர்திருத்தங்கள் எளிதாக தொழில் செய்தல், சந்தைப் போட்டி மற்றும் முதலீட்டாளர் நம்பிக்கையை மேம்படுத்தியுள்ளன என்று இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.
- புது தில்லியில் இந்திய வெளிநாட்டு வர்த்தகக் கழகத்தின் (IIFT) வர்த்தகம் மற்றும் முதலீட்டுச் சட்ட மையம் (CTIL) மற்றும் காம்பிடேர் அறக்கட்டளை ஆகியவை ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடலின் போது இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

## ICMM அறிக்கை 2026




- உலகின் சுரங்கம் மற்றும் உலோக அலகுகளில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு, குறைந்தபட்சம் ஒரு குறிப்பிடத்தக்க இயற்பியல் நீர் அபாயத்திற்கு உள்ளாகியுள்ளன.
- இந்த ஆய்வு 148 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் உள்ள 12,000-க்கும் மேற்பட்ட வசதிகளைப் பகுப்பாய்வு செய்தது.
- அடிப்படை நீர்ப் பற்றாக்குறையே மிகவும் பொதுவான அச்சுறுத்தலாகும் என்பதோடு இது 38% வசதிகளைப் பாதிக்கிறது, அதே நேரத்தில் வறட்சி அபாயம் உலகளவில் 27% என்ற அளவைப் பாதிக்கிறது.
- சிலி, பெரு, தெற்கு ஆப்பிரிக்கா, வடக்கு சீனா, மத்திய இந்தியா, மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் மேற்கு அமெரிக்கா ஆகிய பகுதிகளில் கூட்டு நீர் அபாயப் பகுதிகளை இந்த அறிக்கை அடையாளம் காட்டுகிறது.
- இது சர்வதேசச் சுரங்கம் மற்றும் உலோகங்கள் மன்றத்தின் புதிய அறிக்கையாகும்.
- சுரங்கம் மற்றும் உலோகங்கள் துறையில் உள்ள நீர் அபாயங்கள் குறித்த முதல் விரிவான, பல்வேறு பொருட்கள் சார்ந்த பகுப்பாய்வு இதுவாகும்.
- இந்த மதிப்பீடு வெள்ளம், வறட்சி, அடிப்படை நீர் பற்றாக்குறை, அடிப்படை நீர் வறட்சி மற்றும் ஆண்டுக்கு ஆண்டு மாறுபாடு ஆகிய ஐந்து இயற்பியல் நீர் அபாயக் குறிகாட்டிகளைக் கருத்தில் கொள்கிறது.
- சுரங்கம் மற்றும் உலோகங்கள் துறை எதிர்கொள்ளும் மிகவும் பொதுவான அபாயம் அடிப்படை நீர்ப் பற்றாக்குறையாகும்.
- வறட்சி இரண்டாவது மிகவும் பரவலான நீர் அபாயமாகும்.
- அலுமினா, அலுமினியம், எஃகு மற்றும் மாலிப்டினம் உற்பத்தி ஆலைகளில் வெள்ளப் பாதிப்பு குறிப்பாக அதிகமாக உள்ளது.

- சர்வதேச சுரங்கம் மற்றும் உலோகங்கள் மன்றம், சுரங்கம் மற்றும் உலோகத் தொழில் துறையில் நிலையான வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கத்தில், தலைமைச் செயல் அதிகாரி தலைமையிலான ஒரு தலைமைத்துவ அமைப்பாக 2001-ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.

# மாநிலச் செய்திகள்

## விசாகப்பட்டினம் துறைமுகம் - கடல்சார் ஏற்றுமதி

- ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள விசாகப்பட்டினம் துறைமுகம், 2024-25 ஆம் நிதி ஆண்டில் இந்தியாவின் மொத்த கடல்சார் பொருட்கள் ஏற்றுமதியில் 50.87% கையாண்டுள்ளது.
- விசாகப்பட்டினம் துறைமுகம் ஆந்திரப் பிரதேசத்தின் கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள ஒரு பெரிய துறைமுகமாகும், மேலும் இது சரக்கு போக்குவரத்தின் முக்கிய நுழைவாயிலாக செயல்படுகிறது.
- இந்தியாவின் கடல்சார் ஏற்றுமதியில் உறைந்த இறால், மீன், கணவாய் மீன், நண்டு மற்றும் பிற கடல் உணவுப் பொருட்கள் அடங்கும்.
- 2025-26 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி 1.93 மில்லியன் டன் அளவில், ₹72,325.82 கோடியை (8.28 பில்லியன் டாலர்) எட்டியுள்ளது.
- வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (MPEDA), கடல் உணவு ஏற்றுமதி மேம்பாடு, தரக் கட்டுப்பாடு மற்றும் சந்தை மேம்பாடு ஆகியவற்றை ஆதரிக்கிறது.




# விளையாட்டுச் செய்திகள்

## 2026 ISSF உலகக் கோப்பை

- ரைபிள், பிஸ்டல் மற்றும் ஷாட்கன் நிகழ்வுகளில் நான்கு பதக்கங்களுடன் (1 தங்கம், 1


வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்கள்) சர்வதேச துப்பாக்கிச் சுடுதல் விளையாட்டுக் கூட்டமைப்பின் (ISSF) 2026 ஆம் ஆண்டிற்கான உலகக் கோப்பைப் பயணத்தை இந்தியா நிறைவு செய்துள்ளது.

- 2026 ISSF உலகக் கோப்பையில் அதிகப் பதக்கங்களை வென்று சீனா பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளது.
- மகளிர் 25மீ பிஸ்டல் பிரிவில் ஈஷா சிங் தங்கம் வென்றார்.
- மகளிர் 10மீ ஏர் பிஸ்டல் பிரிவில் சன்யம் விஜ் வெள்ளிப் பதக்கமும், மகளிர் 25மீ பிஸ்டல் பிரிவில் மனு பாக்கர் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.
- 10மீ ஏர் ரைபிள் கலப்பு அணிகள் பிரிவில் சோனம் மஸ்கர் மற்றும் ஹிமான்ஷு தில்லான் ஆகியோர் வெண்கலம் வென்றனர்.




# இதரச் செய்திகள்

## ஹரப்பா நாகரிகத்தின் வீழ்ச்சி




- பீர்பால் சாஹ்னி தொல்லுயிர் அறிவியல் நிறுவனம் (BSIP) நடத்திய ஆய்வில், தற்போதைய காலகட்டத்திற்கு முன்பு (BP) சுமார் 4,200 ஆண்டுகளுக்கு முன்பு பலவீனமான இந்திய கோடைக்காலப் பருவமழை (ISM) ஹரப்பா நாகரிகத்தின் வீழ்ச்சிக்குப் பங்களித்ததாகக் கண்டறியப்பட்டுள்ளது.
- கடந்தகால தாவரங்கள் மற்றும் பருவநிலை மாற்றங்களை மறுகட்டமைக்க, கர்வால் இமயமலையில் உள்ள தியோரியா தால் ஏரியிலிருந்து மகரந்தப் பதிவுகளை

ஆராய்ச்சியாளர்கள் பகுப்பாய்வு செய்தனர்.

- 4.2 ka நிகழ்வு (4,200 ஆண்டுகளுக்கு முந்தைய பருவநிலை மாற்றம்) ஆனது குளிர்ந்த மற்றும் வறண்டப் பருவநிலையை ஏற்படுத்தியதாகவும், பருவமழையை பலவீனப் படுத்தியதாகவும், சிந்து மற்றும் கக்கர்-ஹக்ரா நதிப் பகுதிகளில் விவசாயத்தை பாதித்ததாகவும் ஆய்வு கண்டறிந்துள்ளது.
- நதி வெள்ளம் மற்றும் நீர் இருப்பு குறைந்ததன் காரணமாக, ஹரப்பா மக்கள் கிழக்கு கங்கை சமவெளிகளை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர்.
- இந்த பருவநிலை மாற்றம், 'வெப்பமண்டலங்களுக்கிடையிலான ஒருங்கு மண்டலம்' (ITCZ), 'எல் நினோ' (El Niño) மற்றும் 'இந்தியப் பெருங்கடல் இருமுனை' (IOD) ஆகியவற்றின் மாற்றங்கள் போன்ற காரணிகளுடன் தொடர்புடையது என ஆய்வு இணைக்கிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★